முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1143

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.11.2022, செவ்வாய்கிழமை

1. தர்மசக்தி மிகு அரங்கனே
தவசியாய் வாழும் தேசிகனே
பேருலகை ஞான வழி நடத்தி
பிரபஞ்சத்தையே ஞான யுகமாக மாற்றவந்த
2. மாற்றவந்த ஆறுமுக அரங்கனே
மாதவராஜனே உமை போற்றி
ஆற்றல்பட ஆறுமுகப்பெருமான் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
3. ஆசியதும் சுபகிருது துலை திங்கள்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 29 ம் நாள் 15.11.2022 செவ்வாய்கிழமை)
அரங்கனுக்கு சக்தி கூட எடுத்துரைப்பேன்
பேசிட அரங்கன் தவபலம்
பேருலகமெங்கும் தர்மமாக உருமாறி
4. மாறியே ஆக்கம் தந்து வர
மண்ணுலகோர் அரங்கன் தர்மவழியை ஏற்று
தேக்கமின்றி தொண்டு செய்து உலகமெல்லாம்
தொடர்ந்து சென்று தர்மத்தை பரப்பி வர
5. வருகவே அரங்கன் தவமே தர்மம்
வல்லமைபட உலகோர்க்கு சக்தியாக ஆற்றல்கூடி
பெருமைபட வருகின்ற மக்களெல்லாம்
பெரும் தர்மத்தின் பலனாய் ஞான நிலை மேல் கூடி
6. கூடியே ஞானிகளாக உலகில்
ஞான ஆட்சிதர உண்டான சக்தி மாந்தர்கள் ஆக
ஆகவே மாற்றம் கண்டு இனிதே
அரங்கனால் இந்த அற்புதத்தை உலகில் படைப்பர்
7. வரம்பெற உலகோர் அன்னதனால் வணங்கி வர வேண்டும் அரங்கன் குடிலுக்கு
அறம்பெருக உலகோர் இணைந்து அரங்கன் தர்மத்தை வளர்க்க வேண்டும்
வேண்டி வேண்டி முறைசெய்து வந்தால்
வேலவன் என் ஆட்சி சடுதி இந்த கலியுகத்தில் அரங்கேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–